03.05.2023 அசா.5 ராஜேஷ் அரவிந்த் சி.சி.13/2017

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) திருமணத்திற்கு முன்பாக திருமண பேச்சுவார்த்தை தொடர்பாக நான் கலந்து கொண்டேன். பேச்சுவார்த்தையின் போது எங்கள் தரப்பில் 7, 8 பேர்கள் வந்தார்கள். எதிரிகள் தரப்பில் 5, 6 பேர்கள் வந்தார்கள். திருமண பேச்சு வார்த்தையின் போது கொடுமக்கல் வாங்கல் பற்றி அப்போது எதுவும் பேசவில்லை. எங்கள் சமுதாயத்தில் திருமண செலவை இரு வீட்டாரும் பகிர்ந்து கொள்வார்கள் என்றால் சரிதான். சில சமயங்களில் பெண் வீட்டார் தான் செய்வார்கள். அசா1 ன் திருமணத்திற்கு செலவுகளை நாங்கள் தான் செய்தோம். அவ்வாறு செலவு செய்யப்பட்டதற்கு உண்டான ஆவணங்களை போலீசாரிடம் கொடுத்தோமா என்று சரியாக ஞாபகமில்லை.

2) திருமண செலவுகளை நாங்களும் எதிரிகள் தரப்பிலும் சரிபாதியாக செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. செலவுகளை நாங்கள் தான் செய்தோம். என்னுடைய முதல் விசாரணையில் 100 பவுன் நகையும், ஸ்கோடா காரும் சீதனமாகக்கொடுத்தாகச் சொல்லி உள்ளேன் என்றால் எதிரிகள் வரதட்சணையாக கேட்டார்கள். நாங்கள் சீதனமாக கொடுத்தோம். எதிரிகள் மீண்டும் 100 பவுன் நகை கேட்ட விசயம் அசா1 சொல்லித்தான் எனக்கு தெரியும். திருமணத்திற்குப்பிறகு 23 நாட்கள் எதிரி இந்தியாவில் இருந்தார். அதன் பிறகு அமெரிக்கா சென்றுவிட்டார். மூன்று வார காலத்தில் கோவிலுக்கு சென்றும் உறவினர்கள் வீட்டிற்கு சென்றும் வந்தார்களா என்றால் 1 வாரம் மட்டும் பிரச்சனை இல்லாமல் இருந்தார்கள். அதன் பிறகு 100 பவுன் நகை கேட்டு பிரச்சனை செய்தார்கள். குறிப்பிட்டு எந்த தேதியில் எதிரிகள் நகை கேட்டார்கள் என்று தெரியாது. என் அப்பாவிடம் போனில் கேட்டார்கள். அவ்வாறு கேட்கும் போது நானும் இருந்தேன்.

3) அசா1 ம் மீதி நகை 100 பவுன் கேட்பதாகவும், வேலைக்காரி போல் நடத்தி வருவதாகவும் 100 பவுன் நகை கொண்டு வந்தால் அமெரிக்காவிற்கு 1 ம் எதிரியுடன் அசா1 ஐ அனுப்பி வைப்பதாகவும் சொன்னதாக அசா1 சொன்னார். டிசம்பர் 4, 5 தேதியில் அசா1 என்னிடம் சொன்னார். 2, 3 எதிரிகள் 100 பவுன் நகை கொண்டு வந்தால் மட்டுமே வாழ விடுவதாக சொல்லியுள்ள சம்பவமானது இந்தியாவிலும் நடந்தது. அமெரிக்காவிலும் நடந்தது. 27.03.2015 ம் தேதியன்று நான் என் பெற்றோர்கள் மற்றும் பாட்டி ஆகியோர்கள் எதிரிகளின் வீட்டிற்கு சென்றோம். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு நேரில் தெரியுமா என்றால் என் அப்பாவிடம் போனில் பேசியபோது நானும் உடன் இருந்து கேட்டேன்.

4) பொதுவாக பெண்ணிற்கு தலைபிரசவம் பெண் வீட்டில் தான் பார்ப்பார்கள் என்றால் அசா1 அந்த சமயத்தில் அமெரிக்காவில் இருந்ததால் 1ம் எதிரி பிரசவ செலவு செய்ய இயலாது என்று சொல்லிவிட்டதால் வரதட்சணை பாக்கி உள்ளதால் உன் அம்மா வீட்டிற்கு செல் என அசா1 திருப்பி அனுப்பிவிட்டார். அசா1ன் விருப்பத்தின் பேரில் தான் பிரசவத்திற்காக அசா1 அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றார் என்றால் சரியல்ல. குழந்தையை எதிரிகள் பார்த்து சென்றார்கள். மருத்துவமனையில் பார்த்தற்கு பிறகு பார்க்க வரவில்லை. அசா1 குழந்தை பிறந்த பிறகு எதிரியுடன் வாழ விரும்பவில்லை என்றால் சரியல்ல. தற்போதும் அசா1 எதிரியுடன் வாழ தயராக இருக்கிறார். அசா1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும்.

5) அந்த புகாரில் எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் நகை பணம் கேட்டு துன்புறுத்தியதாகத்தான் சொல்லியுள்ளார். நடந்ததைத்சொல்லி உள்ளார். புகார் கொடுக்குப்போகும் போது நான் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். நான் திருப்பூர் காவல் நிலையத்திற்கும், கோவை காவல் நிலையத்திற்கும் நான் சென்றிருந்தேன். திருப்பூர் காவல் நிலையத்தில் கையால் எழுதியும், கோவை காவல் நிலையத்தில் தட்டச்சு செய்தும் புகார் கொடுத்துள்ளார். கோவை புலியகுளம் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே 1ம் எதிரி விவாகரத்து கோரி தாக்கல் செய்திருந்த வழக்கின் அறிவிப்பு கிடைத்தது என்றால் சரிதான்.

6) நாங்கள் 10 பவுன் நகையை கொண்டு சென்ற போது எதிரிகள் 100 பவுன் நகை கேட்டதாக நான் சொல்லியுள்ள சமயத்தில் விவாகரத்து வழக்கு நிலுவையில் இருந்து வந்ததா என்றால் அது பற்றி இப்போது ஞாபகமில்லை. என் அப்பாவும், நானும் சேர்ந்து கமலம் எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் கார்மெண்ட் டிரேடிங் தொழில் செய்து வருகிறோம். அதன் உரிமையாளர் நான் தான். அந்த நிறுவனத்தில் ஏற்றுமதி வியாபாரம் கிடையாது. உள் நாட்டு வியாபாரம் மட்டும் தான். ஜிஎஸ்டி பதிவு எண் உண்டு. வருமான வரி செலுத்தி வருகிறேன். அசா1க்கும் வியாபாரத்தில் எந்தவித சம்மந்தமில்லை. நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் அசா1க்கு ஆதரவாக எனக்கு நேரில் தெரியாத விசயத்தை தெரிந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நேரில் எந்தவித விசயமும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.